20.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

தேனி மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி விவசாயிகள் ஜூலை 31-ஆம் தேதிக்குள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம் என்று விவசாயத் துறை அதிகாரிகள் கூறினர். இது குறித்து அவர்கள் கூறியது: தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனம் மூலம் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குறுவை நெல் சாகுபடி விவசாயிகள் ஜூலை 31-ஆம் தேதிக்குள்ளும், கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப் பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, வெங்காயம், மஞ்சள், வாழை சாகுபடி விவசாயிகள் வரும் செப்.15-ஆம் தேதிக்குள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம்.

பயிர் காப்பீட்டுத் திட்ட முன்மொழிவு படிவங்களை விவசாயிகள் வேளாண்மைத் துறை அலுவலகம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம். முன்மொழிவு படிவத்துடன் சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரின் சான்றினை இணைத்து விவசாயிகள் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கி மூலம் பயிர் காப்பீட்டுத் திட்ட பிரீமியத்தை செலுத்த வேண்டும் என்றனர்.

**திருவள்ளூரில் திடீர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

திருவள்ளூர், அதன் சுற்றுப்புற கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி நேரம் பெய்த திடீர் மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். திருவள்ளூர் மாவட்டப் பகுதிகளில் கடந்த சில

ஆண்டுகளாகவே போதிய மழை பெய்யவில்லை. இதனால், விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட இந்த மாவட்டத்தில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டன. நீர்நிலைகளில் வறட்சி, நிலத்தடி நீர்மட்டம் சரிவு, பயிர்களுக்கு பாசனப் பற்றாக்குறை என பல்வேறு பிரச்னைகளால் பாதிப்புகள் தொடர்ந்து வந்தன. குறிப்பாக நெல் விவசாயிகள் பெரிய அளவில் நஷ்டத்தை சந்தித்தனர். மாநில அரசும் வறட்சி நிவாரணம் வழங்காததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மேலும், கோடைகாலம் முடிந்து பருவமழை காலம் தொடங்கியுள்ள நிலையில், மாவட்டத்தில் எங்கும் குறிப்பிடத்தக்க அளவில் மழை பெய்யவில்லை. மாறாக அக்கினி நட்சத்திரம்போல் வெயில் சுட்டெரித்தது. இதனால், பல கிராமங்களில் குடிநீருக்கே பஞ்சம் ஏற்படும் நிலை உருவானது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் திடீரென வானத்தில் மேகமூட்டங்கள் சூழ்ந்தன. அடுத்த அரை மணி நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. சுமார் 5.30 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தத் திடீர் மழையால் திருவள்ளூர் பேருந்து நிலையம், பஜார் பகுதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியதால் பொதுமக்கள் அவதிப்பட்டனர். பாதாளச் சாக்கடைத் திட்டத்தால் பல பகுதிகளில் சாலைகள் சேரும், சகதியுமாக மாறின.

**நீலகிரியில் பரவலாக மழை, கடும் குளிர்**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. மழையுடன் பலத்த காற்றும் வீசி வருவதால் உதகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடும் குளிர் நிலவுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் பெய்த தொடர் மழையால், கால நிலையில் மாறுதல் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், கடந்த இருதினங்களாக மீண்டும் பரவலாக மழை பெய்யத்

தொடங்கியுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதேபோல, நீராதாரங்களும் நிரம்பத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், மழையுடன் பலத்த காற்றும் வீசுவதால் உதகை உள்ளிட்ட பகுதிகளில் கடும் குளிர் நிலவுகிறது. இதன் காரணமாக சாலைகளில் உள்ளூர் மக்களின் நடமாட்டம் வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

ஆனால், ரம்ஜான் விடுமுறை என்பதால் கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் உதகையில் குவிந்துள்ளனர். இவர்கள் மழையை பொருட்படுத்தாமல் பல்வேறு சுற்றுலா மையங்களிலும் அதிகளவில் காணப்படுகின்றனர்.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 223 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் பதிவான மழை விவரம் வருமாறு: (அளவு மி.மீட்டரில்): தேவாலா-42, அவலாஞ்சி-33, அப்பர்பவானி-25, கூடலூர்-22, நடுவட்டம்-28, கிளன்மார்கன்-19, குந்தா-17, உதகை-13.2, எமரால்டு-9, குன்னூர்-4.8, கோத்தகிரி மற்றும் கெத்தை தலா 4, கொடநாடு-3, கேத்தி-2.2 மற்றும் கல்லட்டி 2 மி.மீ.

**சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தமிழகத்தில் கோடை காலம் முடிந்தும் கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. ஆனாலும் வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த 3 நாள்களுக்கு கோவை, நீலகிரி, தேனி ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் தற்போது பெய்து வரும் மழைக்கு வெப்பச்சலனமே காரணம் என்று வானிலை ஆய்வு அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வால்பாறை, சின்னக்கல்லாறு, செம்பரம்பாக்கத்தில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. தேவலா, தாம்பரத்தில் 40 மி.மீ. மழையும், பொள்ளாச்சி, சென்னை மீனம்பாக்கம், நடுவட்டத்தில் 30 மி.மீ மழையும் பெய்துள்ளது.

ஸ்ரீபெரும்புதூர், திருவாலங்காடு, அரக்கோணம் (20 மி.மீ.), கேளம்பாக்கம், ஊட்டி, பூந்தமல்லி, கடலூர், திருவள்ளூர் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**விளைநிலங்கள் அழிக்கப்படுவது தடுக்கப்படுமா?**

சின்னமனூர் நகராட்சியை சுற்றியுள்ள விளைநிலங்களை அழித்து கட்டடங்கள் கட்டப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டம் சின்னமனூரில் விவசாயம் பிரதான தொழில். முல்லைப்பெரியாறு இவ்வூர் வழியாக செல்வதால் ஆண்டு முழுவதும் இருபோக நெல் விவசாயம் நடைபெறுகிறது. மேலும் வாழை, தென்னை, திராட்சை, கரும்பு, பருத்தி என தோட்டப்பயிர்கள், எண்ணை வித்துகள், சிறுதானிய பயிர் வகைகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் எதுவும் இல்லாத நிலையில் விவசாயம் மற்றும் அது தொடர்பான வேலைகள் மூலமாகவே இப்பகுதி மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இங்கு விளைவிக்கப்படும் செங்கரும்பு புகழ்பெற்றது. திராட்சை, காய்கறிகள், வாழைப்பழங்கள் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்காக 10க்கும் மேற்பட்ட குளிரூட்டப்பட்ட தனியார் சேமிப்பு கிடங்குகள் உள்ளன.

இந்நிலையில் சின்னமனூரில் உள்ள விளை நிலங்கள் அழிக்கப்பட்டு திருமண மண்டபங்கள், கடைகள், பெட்ரோல் பங்குகள், குடியிருப்புகளாக மாறிவிட்டன. இவற்றில் இருந்து கொட்டப்படும் கழிவுகள் அருகில் உள்ள வயல் வெளியில் விழுவதால் நிலம் மாசடைகிறது.

மேலும் நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள விளைநிலங்களை விவசாயிகளிடம் இருந்து வாங்கி குடியிருப்புகளாகவும் மாற்றி வருகின்றனர். எனவே விளைநிலங்களை தரிசு நிலமாக மாற்றி, கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதை சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் தடுத்து நிறுத்தவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சிறு, குறு விவசாயிகள் நஷ்டமடைவதை தடுக்க பயிர் காப்பீட்டு திட்டம்**

சிறு, குறு விவசாயிகள் நஷ்டம் அடைவதை தடுக்கும் வகையில் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில் 20 வகையான பயிர்களுக்கு குறிப்பிட்டுள்ள நாள்களுக்குள் பிரிமிய தொகை செலுத்தி பயன்பெறலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய வேளாண் பயிர் காப்பீடு நிறுவனத்தின் மண்டல மேலாளர் வ.பாரதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் அனைத்து மாவட்டத்திற்கும் நிகழாண்டில் காரீப் பருவத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மூலம் நிகழாண்டில் 20 பயிர்களுக்கு செயல்படுத்தப்படுகிறது.

காரீப் பருவத்தில் நெல் குறுவை சாகுபடி செய்துள்ள சிறு, குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.228, கம்பு-ரூ.32, சோளம்-ரூ.38, ராகி-ரூ.124, மக்காச்சோளம்-ரூ.157, துவரை-ரூ.127, உளுந்து-ரூ.62, பச்சைபயறு-ரூ.51, நிலக்கடலை-ரூ.388, எள்ளு-ரூ.93, சூரியகாந்தி-ரூ.270, பருத்தி-ரூ.253, வெங்காயம்-ரூ.2614, மஞ்சள்-ரூ.6877, வாழை-10876, மரவள்ளிக் கிழங்கு-ரூ.1702, உருளை-4514, அண்ணாசிபழம்-ரூ.4776, கரும்பு-ரூ.1876 செலுத்த வேண்டும். விவசாயிகள் பிரிமியத்தை செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறப்பட்டு முன்மொழிவு படிவத்துடன் அவரவர் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் செலுத்த வேண்டும். மேலும், முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண்மை துறை, கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வங்கியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டார பகுதி கிராமங்களில் அறுவடை சோதனைகள் நடத்தப்படும். அதன் அடிப்படையில் நிகழாண்டு பருவத்தில் சராசரி மகசூலை, கடந்த 3 அல்லது 5 ஆண்டுகால உத்திரவாத மகசூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ

அந்த விகித அடிப்படையில் கணக்கிட்டு காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படும். இத்திட்டத்தில் நெல் பயிருக்கு காப்பீடு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் சேருவதற்கான கடைசி நாள் வருகிற 31.7.2015 ஆகும். கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைபயறு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, பருத்தி, உருளை, வெங்காயம், அன்னாசிபழம், மஞ்சள், வாழை மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஆகிய பயிர்களுக்கு வருகிற 15.9.2015 காப்பீடு செய்து கொள்ளலாம். இக்கூடுதல் மதிப்பீட்டில் பிரிமியத் தொகையினை பயிர் கடன் பெறா விவசாயிகள் அவரவர் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம்.

அதனால், தங்கள் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள வட்டாரப் பகுதியில், எந்தெந்த பயிர்களுக்கு காப்பீடு உள்ளது என்பதை வேளாண்மைத்துறை அலுவலர்கள் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். அதையடுத்து ஒவ்வொரு பயிருக்கும் நிர்ணயம் செய்த பிரிமியத் தொகையை விவசாயிகள் செலுத்தி பயனடைய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உதகையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு, ஆட்சியர் பி.சங்கர் தலைமை வகித்தார். தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தலைமையிலான, தோட்டக்கலைத் துறையினர், பல்வேறு துறைகளின் அலுவலர்கள் மற்றும் விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில், விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறைகளுக்கு அனுப்பி பெறப்பட்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, விவசாயிகளின் 39 கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

தோட்டக்கலைத் துறை சார்பில், கேரட் விதைகள் விதைப்பு மேற்கொள்ள ஒற்றை வரி விதைப்பு இயந்திரம், 6 வரிசை விதைப்பு இயந்திரங்களைக் கொண்டு விதைப்பு மேற்கொள்வது தொடர்பாக செயல்முறை விளக்கங்கள் நடைபெற்றன. அதனடிப்படையில், கேரட் விதைப்பு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊர்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேம்பாட்டுத்

திட்டத்தின் மூலமாக கேத்தி பாலடாவிலிருந்து சேலாஸ் செல்லும் சாலையில் நீரோடையின் குறுக்கே மலைப்பகுதி பாலம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதேபோல, வன விலங்குகள் விளை நிலங்களுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் அகழிகள் அமைத்து, வனப் பணியாளர்களைக் கொண்டு வன உயிரினங்களை காட்டுக்குள் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவகிறது. இப்பணிகளில் வேட்டைத்தடுப்பு காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வன உயிரினங்கள் சேதப்படுத்திய பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

**விவசாயிகள் தற்கொலை; வெள்ளை அறிக்கை தேவை: விஜயகாந்த், இரா.முத்தரசன்**

விவசாயிகள் தற்கொலை தொடர்பாக தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று தேமுதிக தலைவர் விஜயகாந்த், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் வலியுறுத்தினர்.

விஜயகாந்த்: விவசாயிகள் தற்கொலை எண்ணிக்கையில் இந்திய அளவில் தமிழகம் 4-ஆவது இடத்தில் இருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் கிடைக்காததாலும், விவசாயத்துக்காக வாங்கிய கடனை அடைக்க முடியாததாலும் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

இந்த நிலையில் பயிர்க் கடன், பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆக்கப்பூர்வமாகச் செயல்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீர்நிலைகளைக் காப்பாற்றும் முயற்சியிலும் ஈடுபடவில்லை.

இனியாவது, விவசாயத்தைக் காக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு, விவசாயிகளை அரசு காப்பாற்ற வேண்டும்.

மேலும், விவசாயிகளின் இன்றைய நிலை தொடர்பாக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இரா.முத்தரசன்: 2014-ஆம் ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் 5,650 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தமிழகத்தில் 68 விவசாயிகள், 827 விவசாயத் தொழிலாளர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண முன் வரவேண்டும். விவசாயத்தை மேம்படுத்த எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும். மேலும், விவசாயிகள் தற்கொலை தொடர்பாக தனது நிலையை மக்களுக்கு தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

**ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் ஞாயிற்றுக்கிழமை நீர் வரத்து அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தற்போது மழை பெய்து வருவதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் உள்ளிட்ட அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இந்த அணைகளிலிருந்து சனிக்கிழமை திறந்து விடப்பட்ட உபரி நீர், பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. இதன் காரணமாக, கடந்த சில நாள்களாக நீர் வரத்து குறைவாக காணப்பட்ட ஒகேனக்கல் அருவியில், தற்போது நீர்வரத்து கூடுதலாக உள்ளது. ஒகேனக்கல்லில் சனிக்கிழமை நொடிக்கு 6,000 கன அடியாக இருந்த நீர் வரத்து, ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அருவியில் நொடிக்கு 11,500 கன அடி நீர் வருவதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பயணிகள் வருகை அதிகரிப்பு: தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை சுற்றுலாப் பயணிகள் வருகை அதிக அளவில் இருந்தன.

தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தங்களது குடும்பத்துடன் சுற்றுலா வந்தனர்.

பிரதான நீர்வீழ்ச்சி, ஊட்டமலைப் பகுதி உள்ளிட்ட இடங்களில் சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் குளித்தனர். மேலும், பரிசல் சவாரி செய்து பெரியபாணி, மணல்திட்டு, மாறுகொட்டாய், கர்நாடகப் பகுதியில் உள்ள அருவி உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று காவிரி ஆற்றின் அழகையும், கொட்டும் நீர்வீழ்ச்சியையும் கண்டு ரசித்தனர்.

பயணிகள் வருகை அதிகரித்ததையொட்டி ஒகேனக்கல் போலீஸார், ஊர்க்காவல் படையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் படைத் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பரமத்தி வேலூர் வட்டம், கபிலர்மலை அருகே சின்னசோளிபாளையத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு பாதுகாப்புத் திட்ட முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம் சின்னசோளிபாளையத்தில் நடைபெற்றது. முகாமில், 153 பசுக்கள், 141 எருமைகள், 374 ஆடுகள், 229 நாட்டுக் கோழிகள்,17 நாய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில், குடல்புழு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், மலடுநீக்க சிகிச்சை, ஆண்மை நீக்க சிகிச்சை, நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய் தடுப்பூசி, நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

முகாமில் பசுங்கன்றுகளுக்கான பேரணி நடைபெற்றது. சிறந்த நான்கு கன்றுகளுக்கு பெரியசோளிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் மணி

பரிசுகளை வழங்கினார். முகாமில், கபிலர்மலை கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர் தனவேல், கால்நடை ஆய்வாளர் வெங்கடாசலம், கால்நடைப் பராமரிப்பு உதவியாளர் பொன்னம்மாள் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

**விளைபொருட்களை காக்க அரியலூரில் குளிர்ப்பதனக் கிடங்கு**

அரியலூர் மாவட்டத்தில் விவசாய விளைப்பொருட்களை பாதுகாக்க குளிர்ப்பதன கிடங்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் காய்கறி, பழங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் பெருமக்கள் தங்களது சாகுபடி செய்த வேளாண் விளை பொருட்களை எதிர்பார்த்த விலைக்கு விற்க முடியாமல் நஷ்டம் அடைவதை அரசு கவனத்தில் கொண்டு, விவசாயிகளின் துயரத்தைப் போக்கும் வகையில் அவர்களின் விளைப்பொருட்களை இருப்பில் வைத்து, நல்ல விலைக்கு விற்று பயனடைவதற்கு ஏதுவாக அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்துக் கொள்ள குளிர்பதனக் கிட்டங்கி தமிழக முதல்வரால் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திறந்து வைக்கப்பட்டு செயல்படுகிறது. எனவே விவசாயிகள் மற்றும் வணிகர்கள் மேற்படி குளிர்பதனக் கிட்டங்கியில் அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கட்டணத்தில் தங்களது விளைபொருட்களை இருப்பு வைத்து நல்ல விலை வரும் காலத்தில் விற்று பயனடையலாம்.

**விவசாயிகள் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட தண்ணீர் புரட்சி செய்ய வேண்டும்**

விவசாயிகள் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட வேண்டுமானால் தண்ணீர் புரட்சி செய்ய வேண்டும் என்றார் குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், கிரீடு வேளாண் அறிவியல் மையம் ஆகியவை இணைந்து, அரியலூர் மாவட்டம், சோழன்மாதேவி கிரீடு

வேளாண் அறிவியல் மையத்தில் இயற்கை வேளாண் கருத்தரங்கை வெள்ளிக்கிழமை நடத்தின. கருத்தரங்கில் பங்கேற்று, அவர் மேலும் பேசியது:

கிரீடு வேளாண் அறிவியல் நிலையம் இப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு விவசாயத்தில் பயிற்சி பெற வழி வகுக்க வேண்டும்.

விவசாயிகள் நீடித்த தன்னிறைவு பெற்ற கரும்பு உற்பத்தி திட்டத்தை செயல்படுத்தி, கரும்பு உற்பத்தியை 2 மடங்காக்குவது மட்டுமல்லாமல், விவசாயிகள் அனைவரும் இணைந்து தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

கரும்பும், கரும்பு சார்ந்த பொருள்களை ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் சூழ்நிலையை மத்திய, மாநில அரசுகள் ஏற்படுத்த வேண்டும்.

விவசாயிகளின் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட வேண்டுமானால் தண்ணீர் புரட்சி செய்ய வேண்டும். அதற்கு மழைநீர் சேமிப்பு அவசியம். விவசாயம்தான் அனைத்துக்கும் அடிப்படை. அப்படிப்பட்ட விவசாயத்தை பேணி பாதுகாத்து, அதற்கு அடிப்படையான தண்ணீரை சேமிக்க வேண்டும். உணவு பொருள்களை பதப்படுத்த தேவையான குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட வேண்டும். விவசாய உற்பத்தி பொருள்களை மதிப்புக்கூட்டி உலக சந்தையில் விற்பனை செய்ய வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையான தண்ணீர் நமக்கு கிடைக்கிறதா, அதை நாம் சேமிக்கிறோமா, குளங்களை நாம் சுத்தமாக வைத்திருக்கிறோமா, ஆக்கிரமிக்கப்பட்ட ஊருணிகள் மற்றும் குளங்களை மீட்டிருக்கிறோமா, தமிழ்நாட்டில் எத்தனை ஊருணிகள் காணாமல் போய்விட்டனவோ தெரியவில்லை. அவற்றை கண்டுபிடித்து தூர்வார அரசுக்கு விவசாயிகள் தான் உதவ வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் நீர்வளத்தை பெருக்க முடியும் என்றார் அப்துல்கலாம்.

கருத்தரங்கில் வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல் துறை. கால்நடைத்துறை, வனத்துறை, மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்புத்

துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தன.

**வேளாண் உற்பத்தி உயரும்போது நாடும் முன்னேறும்**

வேளாண் உற்பத்தி உயரும்போது நாடும் முன்னேறும் என்றார் குடியரசு முன்னாள் தலைவர் ஏபிஜெ. அப்துல்கலாம். கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற ஆறுமுகம் கல்வியகத்தின் 20-ஆம் ஆண்டு தொடக்கவிழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அப்துல்கலாம் மாணவ, மாணவிகளின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். அதன் விவரம்:

கேள்வி: மீண்டும் உலகப்போர் வரப்போகிறது என்பதும், அது தண்ணீருக்காக என்பதும் உண்மையா?

கலாம் : நமது நாட்டைப்பற்றி முதலில் பேச வேண்டும். நதிகள் இணைப்பில் ஒருமித்த கருத்து இருக்க வேண்டும். சிற்றாறுகள், ஊருணிகளுக்கு முதலில் உயிர்கொடுக்க வேண்டும்.

கேள்வி: தற்போதைய கல்வி முறை சரியானதா?

கலாம் : தற்போதைய பாடத்திட்டத்தில் மாற்றம் தேவை. பள்ளி முதல் கல்லூரி வரை மாணவ, மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டை வளர்த்தால் மட்டுமே இக்கால கல்வி உதவும் என்பது எனது கருத்து.

கேள்வி: தற்போது அயல்நாட்டு வேலை, பொருட்கள் மீது மோகம் அதிகரித்துள்ளதே. இதனால் மீண்டும் ஒரு சுதேசி இயக்கம் தேவைப்படுமா?

கலாம் : போதுமான விஞ்ஞான வளர்ச்சியைக் கண்டுள்ளோம். மீண்டும் சுதேசி இயக்கம் தேவை இருக்காது.

கேள்வி: நம் நாடு இன்னும் முன்னேறாமல் இருப்பது வறுமையாலா அல்லது சோம்பேறித்தனத்தினாலா?

கலாம் : வறுமை எனச் சொல்லிவிட முடியாது, ஏராளமான இளைஞர் பட்டாளம் இருந்தபோதிலும் விவசாயத்தில் தற்போது 250 மில்லியன்

டாலர் விவசாயப் பொருள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. 10 ஆண்டுகளில் 350 மில்லியன் டாலராக இது உயரும்போது நாடும் முன்னேறும்.

கேள்வி : 2020-ல் இந்தியா வல்லரசாகி விடுமா?

கலாம் : 5 ஆண்டுகள் உள்ள நிலையில் இளைஞர்கள் மூலம் நிச்சயம் வல்லரசுக் கனவு நனவாகும். முன்னதாக தலைமை வகித்த தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், ஆறுமுகம் கல்வியக நிறுவனருமான சி. சுப்பிரமணியம், கவிதை நூலை வெளியிட்ட கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் பேசினர்.

பள்ளித் துணைத் தாளாளர் ராமசாமி, பள்ளிச் செயலர் அருணகிரி, கல்வி இயக்குநர் பழனிவேல், அறக்கட்டளைத் துணைத் தலைவர் சாமியப்பன், செயலர் பொன்னுசாமி, அறங்காவலர்கள் செல்லம் சுப்பிரமணியம் உள்ளிட்ட சி.எஸ். அறக்கட்டளை நிர்வாகிகள் பங்கேற்றனர். பள்ளி நிர்வாகச் செயலர் புலவர் நாகு. ஆறுமுகம் நன்றி கூறினார்.

**1335 டன் யூரியா கும்பகோணத்துக்கு ரயில் மூலம் வந்தது**

ஓமன் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1335 டன் யூரியா கும்பகோணத்துக்கு சனிக்கிழமை ரயில் மூலம் வந்தடைந்தது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது பம்புசெட் மூலம் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்குத் தேவையான உரம் ஓமன், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

அதன்படி, ஓமன் நாட்டிலிருந்து யூரியா உரம் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வரவழைக்கப்பட்டது. அங்கு யூரியா வந்ததும் கிரிப்கோ நிறுவனம் பெற்றுகொண்டு, 50 கிலோ எடை கொண்ட முட்டைகளாகப்பட்டு, கும்பகோணத்துக்கு 21 ரயில் வேகன் மூலம் 1335 டன் கொண்டு வரப்பட்டது. கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு

சனிக்கிழமை வந்த யூரியா மூட்டைகளை திருவாரூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் அதிகாரிகள் பெற்றுக் கொண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளில் கும்பகோணம், மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பி வைத்தனர். கூட்டுறவு கடன் சங்கத்தின் வழியாக விவசாயிகளுக்கு நடப்பு குறுவை பருவத்துக்கு யூரியா உரம் விநியோகம் செய்யப்பட உள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ரூ. 36 கோடிக்கு பருத்தி ஏலம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ரூ. 36 கோடியில் பருத்தி ஏலம் விடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள உழவர் மையத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளர்ச்சி குறித்து விவசாயிகள், வியாபாரிகளுக்கான விழிப்புணர்வு கூட்டத்தில் அவர் பேசியது: மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, அதிராம்பட்டினம், பூதலூர், கும்பகோணம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பாப்பாநாடு, பாபநாசம், திருப்பனந்தாள், பேராவூரணி, மதுக்கூர், தஞ்சாவூர், வல்லம் ஆகிய 13 இடங்களில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறிய அளவிலான சேமிப்புக் கிடங்கு அல்லது ஒருங்கிணைந்த பெரிய அளவிலான சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும் என விவசாயிகள், வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளனர். இதுகுறித்து ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைக்கப்படும்.

மேலும், சேமிப்பு கிடங்குகளில் எடை இயந்திரம் அமைப்பதற்குப் பரிசீலனை செய்து அரசுக்குப் பரிந்துரைக்கப்படும். கடந்த 5 ஆண்டுகளில் 1,523 விவசாயிகள் பொருளீட்டு கடன் பெற்றுள்ளனர். இந்தக் கூடங்கள் மூலம் ரூ. 36.75 கோடி மதிப்பில் பருத்தி ஏலம் விடப்பட்டு, 50 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். திருவையாறு

வட்டத்தில் மன்னார்சமுத்திரத்தில் வாழை விவசாயிகளுக்கு வாழை பழுக்க வைக்கும் கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கிடங்கை விவசாயிகளும், வியாபாரிகளும் பயன்படுத்தி கொள்ளலாம் என்றார் ஆட்சியர். கூட்டத்தில் வேளாண் துணை இயக்குநர் ஆர். கலியராஜ், விற்பனை குழுச் செயலர் மு. ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றங்கால் அமைக்க அறிவுறுத்தல்**

குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றங்கால் அமைக்கலாம் என வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து புதுகை வேளாண் இணை இயக்குநர் (பொ) ஆர். சதானந்தம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நெல் நாற்றங்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. குறைந்த நீர்த் தேவை, குறைவான சாகுபடி செலவில் மிகுந்த மகசூலும், லாபமும் தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் நெல் நாற்றங்கால் அமைக்கலாம். திருந்திய நெல் சாகுபடி நாற்றங்கால் அமைக்க ஏக்கருக்கு 2 கிலோ விதைகள் போதுமானவை.

நெல் விதைகளுடன் 20 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் எதிர் உயிரிப் பூஞ்சனத்தைக் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். இந்த விதைகளை நீரில் ஊறவைத்து பிறகு வடிகட்டி இருட்டறையில் 24 மணிநேரம் வைத்திருந்து முளை கட்ட வேண்டும். முளை கட்டிய இரண்டாம் கொம்பு விதைகளை ஒவ்வொரு நாற்று மேடையிலும் 375 கிராம் விதைகளைப் பரவலாகக் கலந்து விதைக்க வேண்டும்.

அதன் மேல் சிறிது மண் தூவி விதையை மூட வேண்டும். பூவாளி மூலம் நீர் தெளிக்கலாம் அல்லது சுற்றியுள்ள பள்ளங்களில் நீர் நிரப்பலாம். 14 நாட்களில் நாற்றுகளைப் பறித்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றங்கால் அமைப்பதற்கு விதையளவு குறைவாகத் தேவைப்படுவதால் விதைக்கான செலவு,

நாற்றங்கால் தயாரிக்கும் செலவு, நாற்றங்காலுக்கான உரச் செலவு ஆகியவை குறைகின்றன. நாற்றங்காலுக்குத் தேவையான நீரும் குறைவு. இள நாற்றுகளை (14 நாள் வயது கொண்டவை) நடுவதால் நிறைய தூர்கள்பிடித்து அதிக மகசூல் கிடைக்கும். எனவே, பல்வேறு நன்மைகளைத் தரும் திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றங்கால் அமைத்துப் பயன்பெறலாம்.

**"நீர் வளமும், வன வளமும் இயற்கையை பாதுகாக்கும் காரணிகள்'**

இயற்கையைப் பாதுகாக்கும் முக்கியக் காரணிகள் நீர் வளமும், வன வளமும் என்றார் புதுக்கோட்டை வனவியல் விரிவாக்க அலுவலர் கே. காளீஸ்வரமூர்த்தி.

புதுகை கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி மகளிர் கலை,அறிவியல் கல்லூரியில் சனிக்கிழமை தமிழ்நாடு அறிவியல் ஆராய்ச்சி மன்றம் சார்பில் நடைபெற்ற இயற்கை வேளாண் அறிவியல் விழிப்புணர்வு கண்காட்சியின் நிறைவு விழாவில் கல்லூரித் தலைவர் குரு. தனசேகரன் தலைமையில் அவர் மேலும் பேசியது: இந்தியாவில் 70% பேர் விவசாயத்தை நம்பி இருக்கின்றனர். விவசாயத்தையும் இயற்கையையும் பாதுகாக்க நீர் வளமும், வன வளமும் அடிப்படையானவை. இந்திய தேசிய வனக் கொள்கை 1988 -ன் படி ஒரு நாட்டின் நிலப்பரப்பில் 33% வனப்பரப்பு இருக்க வேண்டும். தேசிய அளவில் 20%மும், தமிழக அளவில் 17.5%மும் வனப்பரப்பு உள்ளன. மாவட்டத்தில் தமிழ்நாடு உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் ஜப்பான் நாட்டின் விரிவாக்கத் திட்டம் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

அதின்படி, சிறு,குறு பெரிய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் தொகுப்பு வழங்கப்படுகிறது. அதிகபட்சம் 12.5 ஏக்கர் வரையிலும் வழங்கப்படுகிறது. மேலும், குடும்பத்துக்கு 20 மரக்கன்றுகள் வரை வழங்கப்படும் இவையனைத்தும் அனைத்தும் அரசு செலவிலேயே நடவு செய்யப்படும். தவிர, 3-ஆம் ஆண்டு முடிவில் உயிருடன் உள்ள

மரக்கன்றுகளுக்கு அரசு நிர்ணயிக்கும் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. ஆகவே, கிராம விவசாயிகளும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகளும் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி வனப்பரப்பை அதிகரிக்க முன் வர வேண்டும் என்றார்.

முன்னதாக நடைபெற்ற அக்கல்லூரி மாணவிகளுக்கான பேச்சுப் போட்டியில் தி. இராஜப்பிரித்தா எஸ். ரம்யா எஸ். பாண்டிச்செல்வி கட்டுரைப்போட்டியில் பி. பர்கானா, டி. சங்கவி, எம். காயத்திரி, ஓவியப் போட்டியில் ச. பாண்டிச்செல்வி எ. சுவேதா ஜி. சத்யா முறையே முதல் 3 இடங்களைப் பெற்றனர்.. ஏ.டி.ஆர். பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பி. செல்வமணி ஆர். ராஜேஸ்வரி, பி. அபிராமி, கட்டுரைப் போட்டியில் எஸ். கார்த்திகா, எஸ். தேவபிரியா. எ. அப்ராபானு ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் வென்றனர்.

முன்னதாக, கல்லூரி முதல்வர் ஜானகிசுவாமிநாதன் தொடக்கி வைத்தார். செயலர் கே. ஆர். குணசேகரன், அறங்காவலர்கள் கே. ரெங்கசாமி, அ. கிருஷ்ணமூர்த்தி, பிரான்சிலின், கிராமப்புற கல்வி மைய இயக்குநர் கே. ஜோசப் சேவியர், கவிஞர் மு. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தினர்.

**பயிர்க்கடன் கேட்டு 1,260 பேர் விண்ணப்பம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 12 நாள்களாக நடைபெற்ற பயிர்க்கடன் முகாமில் 1,260 விவசாயிகள் ரூ. 750.87 லட்சம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர் என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ச. மீனாட்சி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர்க்கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜுலை 1 முதல் 21 ஆம் தேதி வரை வருவாய் கிராமங்கள் வாரியாக சம்மந்தப்பட்ட விஏஓ அலுவலகங்களில் நடைபெற்று வருகிறது. ஜுலை 16 வரை நடைபெற்ற

முகாமில் 1,260 விவசாயிகள் ரூ. 750.87 லட்சம் பயிர்க்கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

பயிர்க்கடன் பெற விரும்பும் விவசாயிகள் அண்மையில் பெற்ற கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்று, சேமிப்புக் கணக்கு புத்தகத்தின் முதல்பக்க நகல், பாஸ்போட் அளவு புகைப்படம் 2, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை இதில் ஏதேனும் ஒன்றின், இரண்டு நகல்களுடன் கலந்து கொள்ளலாம். மேற்கண்ட சான்றுகள் எளிதில் பெற வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் முகாமில் பங்கேற்க உள்ளனர்.

மேலும், 2015- 2016-ல் அங்கீகரிக்கப்பட்ட பயிர் வாரியான கடன் அளவு அடிப்படையிலேயே பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இதுவரை பயிர்க்கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கு முன் பயிர்க்கடன் பெற்றிருந்தால், அதை உரிய காலத்தில் திருப்பி செலுத்தியிருக்க வேண்டும்.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை: கொட்டாரத்தில் 37.5 மி.மீ. பதிவு**

குமரி மாவட்டத்தில் பரவலாக சனிக்கிழமை அதிகாலை சாரல் மழை பெய்தது. கொட்டாரத்தில் அதிகபட்சமாக 37.5 மி.மீ. மழை பதிவானது.

குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாள்களாக மழை பெய்து வருகிறது. மலையோரப் பகுதிகளில் கனமழை கொட்டி வருவதால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. சனிக்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 45.65 அடியாக இருந்தது. அணைக்கு 305 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை

நீர்மட்டம் 72.28 அடியாக இருந்தது. அணைக்கு 457 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 775 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 17.02 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 17.12 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 9.30 அடியாகவும் உள்ளது. நாகர்கோவில் நகரின் குடிதண்ணீர் ஆதாரமாக வழங்கும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 24.55 அடியாக உள்ளது.

மழையளவு: மாவட்டம் முழுவதும் வெள்ளிக்கிழமை இரவு தொடங்கி, சனிக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பேச்சிப்பாறை 13.4, பெருஞ்சாணி 20.2, சிற்றாறு - 1 23, சிற்றாறு - 2 12.6, மாம்பழத்துறையாறு 30, நாகர்கோவில் 29, திற்பரப்பு 28.2, கோழிபோர்விளை 3, திருவட்டார் 33.6, குளச்சல் 24, ஆனைக்கிடங்கு 31, கொட்டாரம் 37.5, மயிலாடி 21.2, இரணியல் 18.2, பூதப்பாண்டி 9.5, கன்னிமார் 11.4, சுருளோடு 30, ஆரல்வாய்மொழி 4.6, பாலமோர் 16.5, புத்தன் அணை 20.6 மி.மீட்டரும் பதிவானது.

**நீர்பிடிப்புப் பகுதியில் மழை: சேர்வலாறு அணை நீர்மட்டம் 3 அடி உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்ததையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்ததையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சனிக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை:

பாபநாசம் அணை 6 மி.மீ., சேர்வலாறு அணை 4 மி.மீ., மணிமுத்தாறு அணை 4.6 மி.மீ., கடனாநதி அணை 1 மி.மீ., ராமநதி அணை 2 மி.மீ., கருப்பாநதி அணை 4.5 மி.மீ., குண்டாறு அணை 6 மி.மீ., அடவிநயினார் அணை 19 மி.மீ.,கன்னடியன் அணைக்கட்டு 19 மி.மீ., அம்பாசமுத்திரம்

12 மி.மீ., சேரன்மகாதேவி 5.4 மி.மீ., தென்காசி 4.2 மி.மீ., செங்கோட்டை 2.1 மி.மீ., ஆய்க்குடி 1.2 மி.மீ., ஆலங்குளம் 1.4 மி.மீ., ராதாபுரம் 6 மி.மீ., நான்குனேரி 1 மி.மீ., சிவகிரி 2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

கடந்த 2 நாள்களாக நீர்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1301.16 கனஅடி நீர்வரத்து இருந்தது.

பாசனம், குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து 1204.75 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 1,500 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 72 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 123.78 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 10 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 25 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. மணிமுத்தாறு அணையிலிருந்து 375 கனஅடியும், கடனாநதி அணையிலிருந்து 110 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 40 கனஅடியும், அடவிநயினார் அணையிலிருந்து 25 கனஅடியும், கொடுமுடியாறு அணையிலிருந்து 50 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.40 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 83.66 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.60 அடி, கடனாநதி அணையின் நீர்மட்டம் 54.30 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 61.50 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 68.63 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 82.25 அடி, வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 29.50 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 52 அடியாகவும் இருந்தது.

இன்றைய வேளாண் செய்திகள்

**50 டி.எம்.சி.,யை எட்டும் மேட்டூர் அணை ஆகஸ்டில் பாசனத்திற்கு நீர் திறப்பு?**



மேட்டூர் அணை நீர் இருப்பு, 50 டி.எம்.சி.,யை நெருங்கியுள்ளதால், ஆகஸ்ட் மாதத்தில், பாசனத்திற்கு தண்ணீர் திறக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தஞ்சை, திருவாரூர், நாகை உட்பட, டெல்டா மாவட்டங்களின் பாசன ஆதாரமாகவும், சேலம், நாமக்கல், சென்னை உட்பட, பல மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாகவும் உள்ள மேட்டூர் அணை, 93 டி.எம்.சி., கொள்ளளவு உடையது. தற்போது, கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து திறக்கப்படும் உபரி நீர், மேட்டூர் அணைக்கு வருகிறது. அதனால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. தற்போது, அணையின் நீர் இருப்பு, 49 டி.எம்.சி.,யாக உள்ளது. விரைவில், 50 டி.எம்.சி.,யை நெருங்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஆகஸ்ட் மாதத்தில், டெல்டா

மாவட்டங்களின் முன்போக சம்பா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

திருச்சி மண்டல நீர்வளத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:அணையில், 50 டி.எம்.சி.,க்கு மேல், நீர் இருந்தால், குறுவை பாசனத்திற்கு திறக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கர்நாடகாவில் இருந்து நீர்வரத்து வெகுவாக குறைந்ததால், குறுவைக்கு தண்ணீர் திறக்க முடியவில்லை.

ஆகஸ்ட், 3ம் தேதி ஆடிபெருக்கிற்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து, முன்போக சம்பா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும். அடுத்தாண்டு ஜனவரி வரை, தண்ணீர் திறப்பு தொடரும். தண்ணீர் திறப்புக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும். இவ்வாறு, அவர் கூறினார்.

**தோட்டக்கலை பண்ணை மேம்பாட்டு பணிகள் துவக்கம்**

மூன்று மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலை பண்ணைகளை, மேம்படுத்தும் பணிகளை, தோட்டக்கலை வளர்ச்சி முகமை துவக்கி உள்ளது.

மாநிலம் முழுவதும், 20 மாவட்டங்களில், 54 இடங்களில் தோட்டக்கலை பண்ணைகள் உள்ளன; தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நடக்கிறது. இங்கு, குறைந்த விலையில் விற்கப்படும் பயிர்களை, விவசாயிகளும், பொதுமக்களும் ஆர்வமுடன் வாங்கி

செல்கின்றனர்.

இந்த, தோட்டக்கலை பண்ணைகளை, படிப்படியாக நவீனப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக, சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பண்ணை - 93.80 லட்சம் ரூபாய்; ராமநாதபுரம் மாவட்டம் உறையூர் பண்ணை - 55.30 லட்சம்; கடலூர் மாவட்டம் நெய்வேலி பண்ணை -

96.32 லட்சம் என, மொத்தம், 2.45 கோடி ரூபாயில், மூன்று பண்ணைகள் மேம்படுத்தப் பட உள்ளன. இதற்கான நிதியை அரசு ஒதுக்கிஉள்ளது.

தோட்டக்கலை வளர்ச்சி முகமை அதிகாரி ஒருவர் கூறியதாவது:அரசு ஒதுக்கிய நிதியை பயன்படுத்தி, மூன்று தோட்டக்கலை பண்ணைகளில், அலுவலகம், குடோன் வசதி, கான்கிரீட் தளம் அமைத்தல், தடுப்புச்சுவர் கட்டுதல், பண்ணை குட்டை வசதி ஏற்படுத்துதல், தண்ணீர் குழாய்கள் பதித்தல், பசுமைக்குடில் மற்றும் நிழற்வலை கூட பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அடுத்ததாக, மேலும், சில பண்ணைகளை மேம்படுத்தும் பணி விரைவில் துவங்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

**மரவள்ளி கிழங்கு உற்பத்தி கேரளாவை மிஞ்சிய தமிழகம்**

மரவள்ளி கிழங்கு உற்பத்தியில், கேரளாவை பின்னுக்குத் தள்ளி, தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. கேரளா, தமிழகம், ஆந்திரா, நாகலாந்து, மேகாலயா, அசாம் ஆகிய மாநிலங்களில் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தியில், கேரளா முதலிடத்தில் இருந்து வந்தது.

இம்மாநிலத்தில், மரவள்ளி கிழங்கின் தேவை அதிகம்என்பதால், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது கேரளாவை, தமிழகம் மிஞ்சிஉள்ளது. கடந்த, 2014ல், மரவள்ளி கிழங்கு உற்பத்தியில், தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதனால், தற்போது தமிழகத்தில் இருந்து அதிக அளவில், மரவள்ளி கிழங்குகள், கேரளாவுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சாகுபடி பரப்பு அதிகரிப்பு:தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:மரவள்ளி கிழங்கு உற்பத்தியில் முதலிடத்தில் இருந்த கேரளாவில், கடந்தாண்டில், 2.5 லட்சம் டன் மட்டுமே உற்பத்தியானது.

தமிழகத்தில், 4.9 லட்சம் டன் உற்பத்தியாகி உள்ளது. மத்திய, மாநில அரசு கள் வழங்கும் சிறப்புத் திட்டங்கள் மூலம், மரவள்ளி கிழங்கு சாகுபடி பரப்பு, தமிழகத்தில் அதிகரித்ததே இதற்கு காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீர் அளவு 4512 கனஅடியில் இருந்து 8781 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 86.65 அடியாக உள்ளது. அணையின் நீர்இருப்பு 49.12 டி.எம்.சி.,யாக உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2000 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

## 'டச் ரோஸ்' விலை டமால்

பெங்களூரு:'டச் ரோஸ்' பூக்களின் விலை, கடுமையாக சரிந்துள்ளது.பூ விவசாயிகள் இப்போது, 5 நாட்கள் வரை வாடாமல் இருக்கும் பூக்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். சாதாரண பூக்கள், 2 நாட்களில் வாடி விடும். பல கலர்களில் பூக்கும், 'டச் ரோஸ்' பூக்கள், 5 நாட்களானாலும் வாடுவதில்லை. அதனால், இதன் விலையும் அதிகம்.

ஹொஸ்கோட், சிக்கபல்லாபூர், ஆனேகல், தேவனஹள்ளி ஆகிய பகுதிகளில், 'டச் ரோஸ்' பூக்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. ஆடி மாதம் துவங்கி விட்டதால், பூக்களின் தேவை குறைந்து இருக்கிறது. சாதாரணமாக ஒரு, 'டச் ரோஸ்' 10 ரூபாய்க்கு விற்கப்படும். ஆனால் இப்போது, ஒரு பூ, 50 பைசாவுக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'டச் ரோஸ்' பூக்களை, 350க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிரிடுகின்றனர். கே.ஆர்., மார்க்கெட்டுக்கு மட்டும், தினமும் ஒரு லட்சம் பஞ்ச் 'டச் ரோஸ்' விற்பனைக்கு வருகின்றன. ஒரு பஞ்ச்சில், 20 பூக்கள் இருக்கும்.

'ஆகஸ்ட் மாதத்தில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பூ விலைசற்று உயர்ந்து, அதன்பிறகு, மெல்ல மெல்ல உச்சத்தை தொடும்' என்கின்றனர் பூ வியாபாரிகள்.

## நெல் இயந்திர நடவுக்கு ரூ.3,000 மானியம்

மதுரை:மதுரையில் நெல் இயந்திர நடவு எக்டேருக்கு ரூ.3000 மானியம் வழங்கப்படுகிறது.மதுரை கிழக்கு, மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள் தனுஷ்கோடி, செல்வம் கூறியதாவது:மதுரையில் முதல்போக பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விவசாய பணிகள் மும்முரமாக நடக்கிறது. நெல் இயந்திர நடவை ஊக்கப்படுத்தும் பொருட்டு எக்டேருக்கு ரூ.3000 மானியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் கூடுதல் செலவினங்களை தடுத்திட இயலும். இத்திட்டத்தின் கீழ் இயந்திர நடவுக்கு விவசாயி ஒருவருக்கு தலா இரண்டு எக்டேர் வீதம் ரூ.6000 மானியம் வழங்கப்படும்.

கிழக்கு, மேற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்கள், கருப்பாயூரணி, ஒத்தக்கடை, சமயநல்லூார், சிக்கந்தர்சாவடி வேளாண் அலுவலகங்களில் தேவையான விதை நெல்

இருப்பு உள்ளது. அதற்குரிய பணம் செலுத்தி விதை நெல்களை விவசாயிகள் பெறலாம். இயந்திர நடவு மானியம் மற்றும் நெல் விதை தேவைக்கு 99941 35950, 99446 44894ல் தொடர்பு

கொள்ளலாம் என்றனர்.

**தென்னை, பயிர்களுக்கு காப்பீடு இணை இயக்குனர் தகவல்**



மதுரை:"தென்னை மற்றும் பயிர்களுக்கு காப்பீடு செய்வதன் மூலம் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இழப்பீட்டை தடுக்கலாம்," என மதுரை வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) சாரநாத்பாபு தெரிவித்தார்.அவர் கூறியதாவது: காரீப் பருவ சாகுபடி பயிர்களான நெல், கம்பு, சோளம் தானியப் பயிர்கள், துவரை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைகள், நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துக்கள், பருத்தி, கரும்பு போன்ற பணப்பயிர்களை பயிரிடும் போது விவசாயிகள் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு, பயிர்க்காப்பீடு செய்வது அவசியம்.

குறுவை நெல் சாகுபடி செய்ய கடன் பெறும் விவசாயிகள் தங்கள் பயிருக்கு காப்பீடு செய்து கொள்ள ஏக்கருக்கு ரூ.254 பிரிமியம் செலுத்த வேண்டும். கடன் பெறாத மற்றும் சிறு குறு விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.228 பிரிமியம் செலுத்த வேண்டும். இதை ஜூலை 31க்குள் பயிர்க்கடன் பெற்றுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் அல்லது வேளாண் விரிவாக்க மையம் மூலம் செலுத்த வேண்டும்.

தென்னை காப்பீடு: தென்னை சாகுபடி விவசாயிகள் தோப்பில் உள்ள மரங்களின் வயது 15 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்தால் மரம் ஒன்றுக்கு ரூ.2.25, 15 வயதுக்கு கூடுதலாக இருந்தால் ரூ.3.50 பிரிமியம் செலுத்த வேண்டும் என்றார்.

## இயந்திர நடவு குறித்து பயிற்சி இல்லை:கூடுதல் செலவால் விவசாயிகள் அவதி

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு இயந்திர நடவு குறித்து போதிய பயிற்சி இல்லாத காரணத்தால், வெளி மாவட்டத்தில் இருந்து இயந்திரங்களை இயக்க ஆட்களை அழைத்து வர வேண்டியுள்ளதால், அவதியடைந்து வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 23 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, ஓசூர் கெலவரப்பள்ளி அணை பாசன பகுதிகளில், 8,000 ஏக்கரும், கிருஷ்ணகிரி அணை பாசன பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கரும் நெற்பயிர்கள் சாகுபடி நடக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக நெல் நடவு, சாகுபடி உள்ளிட்ட விவசாய பணிகளை மேற்கொள்ள கூலி ஆட்கள் தாராளமாக கிடைக்காத காரணத்தால், பல கிராமங்களில் நெல் நடவில் ஈடுபட்ட விவசாயிகள் பண பயிருக்கு மாறி வருகின்றனர். இதை கருத்தில் கொண்டு இயந்திரம் மூலம் நடவு செய்ய விவசாயிகளை வேளாண்மை துறை ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு, 2,000 ஹெக்டர் பரப்பில், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் நடவு செய்வததால், சாகுபடி செலவு, வேலை ஆட்கள் குறைவு, நெல் நடவில் சரியான

இடைவெளி, வரிசை நடவி, கூடுதல் மகசூல் உள்ளிட்ட பயன்களை விவசாயிகள் பெற முடியும். இரண்டு லட்சம் மதிப்புள்ள நெல் நடவு இயந்திரத்தை வாங்க, பெண்கள் ஆதிதிராவிடர், மலைவாழ் பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகளுக்கு, 94 ஆயிரம் மானியமும், பெரிய விவசாயிகளுக்கு, 75 ஆயிரம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வேளாண் பொறியியல் துறை, தனியார் நிறுவனங்கள் மூலம் நெல் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு அரசு கொடுத்த நெல் நடவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு போதிய பயிற்சி இல்லை. இதன் காரணமாக விவசாயிகளால் இயந்திரத்தை பயன்படுத்த முடியாத சூழ்நிலை நிலவுகிறது. இதனால் வெளி மாவட்டத்தில் இருந்து இயந்திரங்கள் இயக்க, ஆட்கள் அழைத்து வர வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.எனவே, விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்படுகிறது. கடந்த 2013ல், மாவட்டத்தில் ஒரு ஹெக்டர் பரப்பில் மட்டும் இயந்திரம் மூலம் நடவு செய்யப்பட்டது. 2014ல், 200 ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே நடவு செய்யப்பட்டது. தற்போது, 2,000 ஹெக்டர் பரப்பில் இயந்திர நடவு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

ஆனால் விவசாயிகளிடையே ஆர்வம் இருந்தாலும், அதற்காக பயிற்சி இல்லாததாலும், நடப்பாண்டில், 600 ஹெக்டர் மட்டுமே இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளப்படும் என தெரிகிறது. எனவே, "இயந்திர நடவு இயந்திரங்கள் மூலம் விவசாயிகளுக்கு நடவு செய்ய செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தரமான விதைகளை தேர்வு செய்ய அறிவுரை**

கிருஷ்ணகிரி:"தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும்' என, விவசாயிகளுக்கு விதை சான்று இணை இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார்.கிருஷ்ணகிரியில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்திற்கு கோவை விதை சான்று இணை இயக்குனர் பழனிசாமி வந்தார். அப்போது, அவர் பரிசோதனை நிலையத்தை ஆய்வு செய்து, விதை பரிசோதனை செய்யப்படும் முறைகளை பார்வையிட்டார். பின்னர், அவர் கூறியதாவது:நடப்பாண்டில், இதுவரை, இந்த விதை பரிசோதனை நிலையத்தில், 32 சான்று விதை மாதிரிகளும், 484 ஆய்வாளர் விதை மாதிரிகளும், 164 பணி விதை மாதிரிகளும் பெறப்பட்டுள்ளது. இதில், 27 சான்று விதை மாதிரிகள், 474 ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும், 162 பணி வதை மாதிரிகள் என மொத்தம், 663 விதை மாதிரிகளுக்கு பரிசோதனை முடிவறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், சாகுபடியின் போது, சான்றட்டை பொருத்தி நல்ல தரமான விதைகளை தேர்வு செய்திட வேண்டும். விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர் மற்றும் விவசாயிகள் பணி விதை மாதிரிகளை, இந்த நிலையத்திற்கு அனுப்பி வைத்து, விதைகளின் தரத்தினை உறுதி செய்துகொள்ள வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.தர்மபுரி விதைப்பரிசோதனை அலுவலர் கமலா, கிருஷ்ணரி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஜெகதீசன் மற்றும் ஜான்லூர்து சேவியர் ஆகியோர் உடனிருந்தனர்.

**மானிய விலையில் காரட் விதை இயந்திரம் விவசாயிகள் வாங்கினால் லாபம் நிரந்தரம்**

ஊட்டி:'விவசாயிகளுக்கு, காரட் விதைப்பு இயந்திரங்கள், மானிய விலையில் வழங்கப்படும்; இதனை வாங்கி விவசாயிகள் நன்மை பெறலாம்' என, தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்தார். விவசாயிகளால் ஏற்கனவே வழங்கப்பட்ட விவசாயம் சார்ந்த கோரிக்கைகள் அடங்கிய, 39 மனுக்கள் மீது விவாதம் நடந்தது. பின், தோட்டக்கலை துறை மூலம், காரட் விதைகள் விதைப்பு மேற்கொள்ள ஒற்றை வரி மற்றும் ஆறு வரிசை விதைப்பு இயந்திரங்கள் மூலம், விதைப்பு மேற்கொள்ளும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பின், கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பு:* காரட் விதைப்பு இயந்திரங்கள், மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் இதனை வாங்கி நன்மை பெறலாம்.

* நடப்பு நிதியாண்டில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ், புதிய தோட்டம் அமைத்தல், பரப்பு விரிவாக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. * பூண்டு, குறுமிளகு சாகுபடி செய்தல், வீரிய ஒட்டு ரக காய்கறி சாகுபடி செய்தல் போன்ற திட்டங்கள், பரப்பு விரிவாக்க திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளன.

* 2014--15 நிதியாண்டில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள, 15 லட்சம் ரூபாயில், ஊர் புற உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கேத்தி பாலாடாவில் இருந்து சேலாஸ் செல்லும் சாலையில், இரண்டாவது கேரட் கழுவும் இடத்திற்கு எதிர்புறம், நீரோடையின் குறுக்கே பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

* 2015--16 நிதியாண்டில், மாநில ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆடாசோலை முதல் சோலாடா பகுதி சாலை புதுப்பிப்புப் பணிக்கு, ஒரு கோடியே 67 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பில் திட்ட அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

* வன விலங்குகள், விளை நிலங்களுக்குள் நுழைவதை தடுக்க, அகழிகள் அமைத்தும், வனப்பணியாளர்களை கொண்டு, வன உயிரினங்களை காட்டிற்குள் விரட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறான அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. கூட்டத்தில், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி உட்பட துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**விலையில்லா ஆடுகள்: கிராம மக்கள் ஆர்வம்**

திருப்புத்தூர்:திருவுடையார்பட்டியில் நடந்த கிராம சபைக் கூட்டத்தில் விலையில்லா ஆடுகள் கேட்டு கூடுதலான மனுக்களை கிராமத்தினர் வழங்கினர்.ஊராட்சித் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் விஜயலெட்சுமி, உறுப்பினர்கள் வீர சேகரன், ஜெயபாரதி, லட்சுமி, சண்முக வள்ளி முன்னிலை வகித்தனர். கால் நடை ஆய்வாளர் நல்மீனா, வி.ஏ.ஓ., அமுதா, செல்லமணி, ஏ.பி.டி.ஓ.. கண்ணன் பங்கேற்றனர்.

விலையில்லா ஆடுகள் திட்டத்திற்கு ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட21 பயனாளிகளுக்கு 200 பேர் விண்ணப்பித்தனர்.ஜூலை 24 வரை மனுக்கள் பெறப் பட்டு, ஜூலை 25ல் பயனாளிகள் பட்டியல் சபையில் வைக்கப்பட்டு, அக்டோபரில் ஒரு பயனாளிக்கு 4 ஆடுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.ஊராட்சி செயலர் முருகன் நன்றி கூறினார். முன்பு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகளுக்கு இந்த ஆர்வத்தை கிராமத்தினர் காட்டவில்லை.

**ஆரோக்கிய வாழ்விற்கு சிறு தானியே உணவே: தாய் வழி இயற்கை உணவகத்தினர் வேண்டுகோள்**

தேவகோட்டை:தேவகோட்டை முருகானந்த நடுநிலைப்பள்ளியில், உணவு திருவிழா, அறிவியல் கொண்டாட்ட விழா மனவளக் கலை பேராசிரியர் காசி விஸ்வநாதன் தலைமையில் நடந்தது. உதவிகல்வி அலுவலர் பால்ராஜ் முன்னிலை வகித்தார். தலைமை யாசிரியை மீனாம்பிகை வரவேற்றார். பரிக்ஷன் அறக்கட்டளை திட்ட இயக்குநர் அறிவரசன் விஞ்ஞான பரிசோதனைகளை செய்து காண்பித்தார்.

சென்னை நல்ல உணவு, தாய்வழி இயற்கை உணவகம் அமைப்புச் சார்பில் உணவுத்திருவிழா நடந்தது. சிறுதானிய நிபுணர் ராஜமுருகன் பேசுகையில், ""நமது நாட்டின் இயற்கை சூழலுக்கேற்ப உள்ளது சிறு தானியங்கள். சிறு தானியங்களான வரகு, சாமை, குதிரை வாலி, தினை உட்பட சிறு தானியங்களில் உணவு தயாரித்து சாப்பிட்டால் எந்த நோயும் வராது. குறிப்பாக வரகு போன்ற சிறுதானியங்களை உட்கொண்டால் இன்று பயமுறுத்தும் சர்க்கரை நோய் அண்டாது. ரசாயனம் கலந்த உரங்களை பயன்படுத்தாமல், இயற்கை உரங்களை பயன்படுத்தி விளையும் பொருட்களைத் தான் சாப்பிட வேண்டும்," என்றார். சென்னை தாய்வழி இயற்கை உணவக அமைப்பு நிர்வாகிகள் ரவி, மகாலிங்கம், ரவிசங்கர், மாறன் ரமேஷ், பள்ளி நிர்வாகி சிந்தாமணி, பள்ளிக்குழு தலைவர் முருகன், செயலர் முத்துவேல், கவுன்சிலர்கள் , முதல்வர் சந்திரமோகன் பங்கேற்றனர். ஆசிரியை மீனாம்பாள் தொகுத்துரைத்தார். ஆசிரியர் சிவக்குமார் நன்றி கூறினார்.

**பழமொழிகள் !!!**



பழமொழிகள் பழமையானவை என்றாலும், நம் முன்னோரின் முதிர்ந்த அனுபவத்தில் மொழிந்தவையாக இருக்கும். இளையோருக்கு அறிவுத் தெளிவைக் கொடுக்கும் உயர்ந்த நோக்கத்தில் உருவானவையே பழமொழிகள். அவை நம்மை தீயவற்றில் இருந்து விலக்கி நல்லவற்றை நோக்கி செயல்படத் தூண்டும். அத்தகைய பழமொழிகள் சிலவற்றை பார்ப்போம்..!

**பருவத்தே பயிர்செய்**

அவ்வையாரின் அமுதமொழி இது. 'பருவம்' என்பது குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கிறது. உரிய காலத்தில் எந்தச் செயலையும் செய்தல் வேண்டும். இல்லையென்றால், எதிர்பார்த்த பலன் கிடைக்காது. படிக்கிற பருவத்தில் செம்மையாக படிக்க வேண்டும். அதேபோல அந்தந்தப் பருவத்தில் பயிர்களை விதைத்து, மழை, காற்றில் வீணாகாமல் பருவத்தே அறுவடை செய்ய வேண்டும். இதுபோன்ற காலம் தவறாமல் செய்ய வேண்டிய கடமைகளை சரியாக செய்ய வேண்டும் என்பதையே இந்த பழமொழி உணர்த்துகிறது. 'இளமையில் கல்', 'ஆடிப்பட்டம் தேடி விதை'

என்பன போன்ற பழமொழிகளும் இதே கருத்தையே வலியுறுத்துகின்றன. **காலம் பொன் போன்றது**

உடல் வலிமையும், செல்வமும் மட்டும் மனிதனுக்கு வெற்றியைத் தேடித் தந்து விடாது. செய்யும் செயல்தான் வெற்றிக்கு அடிப்படை. அதையும் காலம் கருதி செய்வதே வெற்றியை கனியச் செய்யும். ஏனெனில் காலத்தை தவறவிட்டால் மீண்டும் பெற முடியாது. எனவேதான் 'காலம் பொன் போன்றது' என்றனர் நமது சான்றோர்கள்.

**தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்..**

இளமையில் நல்லவற்றை கற்பது, மழைக் காலத்தில் நாற்று நடுவது போன்றதாகும். மாணவப் பருவத்தில் நல்ல பழக்க வழக் கங்களை வளர்த் துக் கொண்டவன், இளமைப் பருவத்தில் வெற்றிகளைக் குவிக்க முடியும். பருவம் தவறி விதைத்தால், பயனைப் பெற முடியாது. இளம் பருவத்தில் வேரூன்றும் பழக்கங்கள் வாழ்க்கை முழுவதும் தொடரும். தீய பழக்கங்களும் அப்படிப்பட்டவையே. அது ஆபத்தானது என்பதை வலியுறுத்தத்தான் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்றார்கள். வேண்டா பழக்கத்தை ஆரம்பத்திலே வேரறுக்காவிட்டால் தீவினையாய் முடியும்! **களவும் கற்று மற**

நாம் சில விஷயங்கள் தவறு என்பதை அறியாமலேயே கற்கிறோம். பிறகு கற்றதில் நல்லதை மட்டும் வைத்துக் கொண்டு தீமையை முழுமையாக மறந்துவிட வேண்டும் என்பதையே இந்த பழமொழி வாயிலாக முன்னோர் நமக்கு உணர்த்துகிறார்கள்.

**எறும்பு ஊர கல்லும் தேயும்**

முயற்சி உடையவர்கள் முயற்சியை கைவிடாது தம் நோக்கத்தில் உறுதியாய் இருந்தால் வெற்றி இலக்கை நிச்சயம் அடைவார்கள் என்ற பொருளை உணர்த்து கிறது இந்த பழமொழி. கல் வலிமையானது. எறும்போ நுண்ணியது. கற்களின் வலிமைக்கு முன் எறும்பின் பலம் சொற்பமானதுதான். ஆனால் எறும்பு ஊர்ந்து ஊர்ந்து, தொடர்ந்து பயணிப்பதால் வலிமையான கல்லிலும் தேய்ந்து வழி உண்டாகும்.

அதுபோலவே தொடர்ந்து முயற்சித்தால் மிகக் கடினமானதாக இருக் கும் இலக்கும் எளிமையாக கைகூடி வரும் என்பதையே இந்த பழமொழி உணர்த்துகிறது.

இளமையில் கற்று, தவிர்க்க வேண்டியவற்றை தவிர்த்து, உரிய காலத்தில் உரிய செயல்களைச் செய்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்பதையே மேற்காணும் பழமொழிகள் நமக்கு கற்றுத் தருகின்றன. பழமொழி வழி நிற்போம், கற்போம், வெல்வோம்.

**பயிர்களுக்கு உயிர் உரங்களை இடுவதால் விளைச்சல் அதிகரிக்கும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் தகவல்**



உத்தமபாளையம்

பயிர்களுக்கு உயிர் உரங்களை இடுவதால் விளைச்சல் அதிகரிக்கும் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<u>உயிர் உரங்கள்</u>

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பகுதியில் ராயப்பன்பட்டி, கோகிலாபுரம் உ.அம்மாபட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி, உ.அம்பாசமுத்திரம், அனுமந்தன்பட்டி, உள்ளிட்ட ஊர்களில் தற்போது

முதல்போக நெல் நடவுபணி நடைபெற்று வருகிறது. திருந்திய நெல்சாகுபடியில் உயிர் உரங்களை பயன்படுத்தி அதிக விளைச்சலை பெறுவது எப்படி? என்று தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரெங்கநாதன், உதவி இயக்குநர் ராஜ்மனோகரன் ஆகியோர் நேரில் சென்று விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:–

நெல் நாற்றுகளின் வேர்பகுதியை 1 ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் 4 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 15 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் நன்கு நனைத்து பின்வயலில் நடவு செய்யவேண்டும். உயிர்உரங்களை பயன்படுத்துவதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதோடு 25 சதவீதம், பரிந்துரைக்கப்பட்ட ரசாயன உரஅளவை குறைத்து இடலாம்.

<u>விளைச்சல் அதிகரிப்பு</u>

அசோஸ்பைரில்லம் உயிர் உரம் வளிமண்டல காற்றில் உள்ள நைட்ரஜனை கிரகித்து தழைச்சத்தாக மாற்றி பயிருக்கு கிடைக்க வழிவகை செய்கிறது. பாஸ்போபாக்டீரியா உயிர்உரம் மண்ணில் உள்ள கரையாத நிலையில் உள்ள பாஸ்பேட்டுகளை கரையும் தன்மை கொண்டதாக மாற்றி எளிதாக பயிருக்கு கிடைக்க செய்கிறது. உயிர் உரங்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத இயற்கைக்கு உகந்த உரமாகும். மேலும் பயிர் வளர்ச்சியை அது ஊக்குவிக்கிறது. விளைச்சல் 10 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

பின்னர் விவசாயிகளுக்கு உயிர் உரங்களை வேளாண்மை இணை இயக்குனர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயிர்உர உற்பத்தி மைய வேளாண்மைஅலுவலர்கள் பாண்டி, ரேணுகா, துணை வேளாண்மை

அலுவலர்கள் சின்னவெளியப்பன், பாலமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தினமும் 40 டன் காய்கறி வர்த்தகம் நடைபெறும் ஓமலூரை மையமாக கொண்டு உழவர் சந்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை**



தினசரி 40 டன் காய்கறி வர்த்தகம் நடைபெறும் ஓமலூரை மையமாக கொண்டு உழவர் சந்தை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். உழவர் சந்தை

ஓமலூர், தாரமங்கலம், காடையாம்பட்டி, மேச்சேரி சுற்று வட்டார பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தக்காளி, கத்திரி, பீர்க்கங்காய், சுரக்காய், பாகற்காய், முள்ளங்கி, புடலங்காய் போன்ற காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் விளைவிக்கப்படுகின்றன. விவசாயிகள் 95 சதவீதம் பேர் ஒருஏக்கர், 2 ஏக்கர் என குறைந்த அளவிலான நிலங்களை வைத்து போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் காய்கறிகளை பயிரிட்டு ஜீவனம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு கஷ்டப்படும் விவசாயிகளின் நலன் காக்கவும், காய்கறிகளை வாங்கி பயன்படுத்தும் பொது மக்கள் பயன்பெறவும் இடைதரகர்களை தவிர்க்கும் வகையில் தமிழக அரசால் உழவர் சந்தைகள்

அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட உழவர் சந்தைகள் சேலம் மாவட்டத்தில் வேளாண்மை வணிக துறை சார்பில் சேலம் அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, அம்மாபேட்டை, ஆத்தூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், மேட்டூர், இடைப்பாடி ஆகிய இடங்களில் உள்ளது.

ஓமலூர் ஆனால் நாளொன்றுக்கு சுமார் 40 டன்னுக்கும் மேல் அனைத்து வகை காய்கறிகள், கீரைவகைகள் என பயிரிடப்படும் ஓமலூர், தாரமங்கலம், காடையாம்பட்டி, மேச்சேரி உள்ளிட்ட இடங்களில் உழவர் சந்தைகள் கிடையாது. இதனால் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பயிரிட்ட காய்கறிகளை 30 கிலோமீட்டர் முதல் 40 கிலோமீட்டர் தூரம் எடுத்து செல்லும் நிலை உள்ளது. உழவர் சந்தைக்கு இலவச பஸ் இயக்கபட்டாலும், சந்தைக்கு சென்று வர காலதாமதம், ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் சில விவசாயிகள் ஓமலூர் தினசரி காய்கறி மார்க்கெட், வாரசந்தை போன்ற இடங்களுக்கு காய்கறிகளை விற்பனைக்கு எடுத்து செல்கின்றனர். ஆனால் இங்கு விவசாயிகளிடம் காய்கறிகளை குறைந்த விலைக்கு வாங்கி பொதுமக்களுக்கு சரிக்குசரி லாபம் வைத்து விற்கின்றனர். இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே ஓமலூரை மையமாக கொண்டு உழவர் சந்தை அல்லது வேளாண் வணிக துறை சார்பில் பசுமை குடில் மார்க்கெட் தொடங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாதிக்கப்படுகின்றனர்

இது பற்றி காய்கறிகள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் கூறியதாவது:–

ஓமலூர் தினசரி மார்க்கெட்டிற்கு ஓமலூர், தாரமங்கலம், காடையாம்பட்டி, மேச்சேரி என சுற்று வட்டாரத்தில் இருந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நாளொன்றுக்கு சுமார் 40 டன்னுக்கும் மேல் அனைத்து வகை காய்கறிகள், கீரைவகைகள் விற்பனைக்கு வருகிறது. இங்கு விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு காய்கறிகளை கொள்முதல் செய்து பொதுமக்களிடம் சரிக்குசரி லாபம் வைத்து விற்கின்றனர். இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள்

பாதிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் காய்கறிகளை விற்க முடியாமல் திருப்பி எடுத்து செல்லும் நிலை ஏற்படுகிறது. உழவர் சந்தைக்கு எடுத்து செல்லவேண்டுமானால் அங்கு காய்கறிகள் விற்பனை செய்ய இடம் ஒதுக்கி தருவதில்லை. அஙகேயும் விவசாயிகள் பெயரில் கடைவைத்திருக்கும் வியாபாரிகளிடம்தான் காய்கறிகளை கொடுக்கவேண்டி உள்ளது. அவர்கள் நியமனம் செய்யப்பட்ட விலையிலிருந்து கிலோவிற்கு ரூ.6 முதல் 8 ரூபாய் வரை கமிஷன் எடுத்து கொள்கின்றனர். உழவர் சந்தையில் கடை வைத்திருக்கும் பெரும்பாலானோர் விவசாயிகளே இல்லை. அவ்வாறு இருந்தாலும் அவர்கள் காய்கறிகள் பயிரிடும் விவசாயிகள் இல்லை. அங்கு கடை வைத்திருப்பவர்கள் உண்மையான உழவர்களா என்பதை ஆய்வு செய்யவேண்டும். இதனை தவிர்க்க தமிழக அரசு உழவர் சந்தைகளில் உள்ள வேளாண் அலுவலர்கள் மூலம் காய்கறிகளை விவசாயிகளிடம் வாங்கி அங்குள்ள வியாபாரிகளிடம் கொடுத்து விற்ற பின் பணம் பெற்றுத்தரவேண்டும். அப்போதுதான் விவசாயிகள், பொதுமக்கள் என அனைவரும் பயன்அடைய முடியும். இல்லையேல் விவசாயம் செய்யும் கொஞ்சம் பேரும் உழவு தொழிலை கைவிடும் நிலை ஏற்படும். எனவே ஓமலூரை மையமாக கொண்டு உழவர் சந்தை அல்லது பசுமை குடில் கடைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## மராட்டியத்தில் மட்டும் கடந்த ஆறு மாதங்களில் 1,300 விவசாயிகள் தற்கொலை



மும்பை,

மராட்டிய மாநிலத்தில் கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையில் 1,300 விவசாயிகள் தற்கொலை செய்துக் கொண்டனர் என்று மாநில வருவாய்துறை தகவல்கள் தெரிவித்துஉள்ளன.

மராட்டிய மாநிலம் கடந்த சில ஆண்டுகளாக வறட்சி மற்றும் பருவம் தவறிய மழையால் பாதிக்கப்படும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. தற்போது மாநில அரசு விவசாயிகள் தற்கொலை தடுப்பதே எங்கள் முதல் நோக்கம் என்று கூறிவருகிறது.

மராட்டியத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துக் கொண்ட விவகாரம் சட்டசபையிலும் எதிரொலித்து உள்ளது. மராட்டிய சட்டசபை மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 13-ம் தேதி தொடங்கியது. இதில் பங்கேற்க முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் வந்தபோது, விவசாயிகள் பிரச்சினையில் அவருக்கு எதிராக காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் ஓரணியில் திரண்டு கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அவை நடவடிக்கைகள் முடங்கியது.

இந்தநிலையில் கடந்த 6 மாதங்களில் மட்டும் மாநிலத்தில் 1,300 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக வருவாய்துறை புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கடந்த 2014-ம் ஆண்டு மராட்டியத்தில் தற்கொலை செய்துக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையானது 1,981 ஆகும். ஆனால் இந்த ஆண்டு 6 மாதங்களில் இதில் 66 சதவிதத்தை எட்டிஉள்ளது. கடந்த 2013-ம் ஆண்டில் மாநிலத்தில் தற்கொலை செய்துக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையானது 1,296 ஆகும். இந்த ஆண்டு இதுவரையிலான தகவல்களை பார்க்கையில், 2015-ம் ஆண்டில் தற்கொலை செய்துக் கொள்ளும் விவசாயிகள்

எண்ணிக்கையானது பிற ஆண்டுகளைவிட உயரக்கூடும் என்ற அச்சமும் எழுந்துஉள்ளது. இதற்கிடையே வருவாய்துறை காட்டும் புள்ளிவிபரமானது தவறு என்று விமர்சகர்கள் கருதுகின்றனர். மராட்டியத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துக் கொள்ளும் விவசாயிகள் விபரம் அடங்கிய தேசிய குற்றப் பதிவுமையத்தின் அறிக்கையானது இதைவிட அதிகம் என்று காட்டுகிறது. தேசிய குற்றப் பதிவு மையம், நாட்டில் தொடர்ந்து விவசாயிகள் தற்கொலைசெய்துக் கொள்ளும் சம்பவம் மராட்டியத்திலே அதிகமாக உள்ளது என்றும் தெரிவித்து உள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

மராட்டியத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துக் கொள்ளும் எண்ணிக்கை உயர்ந்து வருவது தொடர்பாக அம்மாநில வருவாய்துறை மந்திரி ஏக்நாத் காத்சே பேசுகையில், விவசாயிகள் பயன்அடையும் வகையில் நாங்கள் பல்வேறு விதமான திட்டங்களை நடைமுறைபடுத்தி உள்ளோம் மற்றும் தண்ணீர் வசதிகளையும் செய்துக் கொடுத்து உள்ளோம். விவசாயிகள் தற்கொலை செய்துக் கொள்ளும் எண்ணிக்கையானது குறையும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார். விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வதற்கான சாத்தியம் தொடர்பாக அவர் பேசுகையில், “கடந்த காலங்களில் விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது ஆனால் தொடர்ந்து தற்கொலைகளும் நடந்து வருகிறது. பால் மற்றும் கோழி பண்ணைகள் மூலம் அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பை வழங்குவதற்கு நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்,” என்று கூறிஉள்ளார்.

## தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு வானிலை மையம் தகவல்



சென்னை,

தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெயிலின் தாக்கம் அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்தரி வெயில் கடந்த மே மாதம் இறுதியில் முடிவடைந்தது. அதன் பிறகு கடந்த (ஜூன்) மாதத்திலும் கத்திரியில் இருந்தது போல வெயிலின் தாக்கம் இருந்தது. வெயிலின் அளவு கொஞ்சம் கொஞ்சமாக குறையும் என்று எதிர்பார்த்திருந்த இந்த (ஜூலை) மாதத்திலும், வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருக்கிறது. இருப்பினும், இந்த மாதம் தொடங்கியதில் இருந்து அவ்வப்போது வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழைபெய்து வருகிறது. இடியுடன் கூடிய மழை

இந்த நிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் வானிலை குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

கடந்த சில நாட்களாகவே தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. குறிப்பாக, பகல் முழுவதும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து, மாலை நேரங்களில் மழை பெய்கிறது.

அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில், வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று(திங்கட்கிழமை) இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. சென்னையில் மாலை நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தற்போது படிப்படியாக வெயிலின் தாக்கம் குறைந்து வருகிறது. இந்த மாதம் தொடக்கத்தில் அதிகபட்ச வெயில்(105 டிகிரி) பதிவானது. ஆனால் இன்று (நேற்று) 98.6 டிகிரி வெயில் பதிவாகியுள்ளது. இனி வரக்கூடிய நாட்களிலும் வெயிலின் அளவு இன்னும் குறையும்.

இவ்வாறு அவர் கூறினார். மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவுகள் வருமாறு:-

கோவை மாவட்டம் வால்பாறை, சின்னக்கல்லார், திருவள்ளூர் மாவட்டம் செம்பரப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ., நீலகிரி மாவட்டம் தேவலா, காஞ்சீபுரம் மாவட்டம் தாம்பரம் ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ., கோவை மாவட்டம் வால்பாறை தாலுகா அலுவலகம், பொள்ளாச்சி, சென்னை மீனம்பாக்கம், நீலகிரி மாவட்டம் நடுவட்டம், சென்னை மாவட்டம் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

## விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வுகாண நீண்ட கால அடிப்படையில் பணி முதல்–மந்திரி பேச்சு



அமராவதி, அமராவதியில் நேற்று ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது:–

மழை பொய்த்துப்போன சமயங்களில் விவசாயிகள் மீண்டும் தங்கள் நிலத்தில் விதைகளை விதைத்து விவசாயப்பணியில் ஈடுபட விரும்பமாட்டார்கள். இதுபோன்ற சமயங்களில் அரசு திட்டமிட்டு செயல்பட வேண்டும். அதற்கு விவசாயத்தில் நமக்கு ஒரு நீண்ட கால நடவடிக்கை தேவையாக உள்ளது.இது போன்ற நடவடிக்கைகள், வரட்சியால் கடந்த மூன்று ஆண்டுகளாக தவித்து வரும் விதர்பா மற்றும் மரத்வாடா விவசாயிகளிடையே ஒரு நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றார்.

மேலும் அவர் கூறுகையில், நாம் வெறும் தேர்தல் கோணத்தில் சிந்தித்தால் விவசாயிகளின் நிலைமையில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டவர முடியாது. அவர்களின் நிலைமைக்கு தீர்வுகான நாம் ஒரு நீண்ட கால நடவடிக்கைகள் மூலம் பணியாற்றவேண்டும். இதுகுறித்து

மேலும் விவரமாக நாளை(இன்று) தன் வீட்டில் வைத்து பேட்டி அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தற்கொலை தீர்வு அல்ல மந்திரி டி.கே.சிவக்குமார் பேட்டி



பெங்களூரு, விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தற்கொலை ஒன்றே தீர்வு அல்ல என்று மந்திரி டி.கே.சிவக்குமார் கூறினார்.

### மந்திரி டி.கே.சிவக்குமார் ஆறுதல்

ராமநகர் மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் வீடுகளுக்கு மின்சாரத்துறை மந்திரியும், ராமநகர் மாவட்ட பொறுப்பு மந்திரியுமான டி.கே.சிவக்குமார் ராமநகர் மாவட்டத்தில் நேற்று சுற்றுப்பயணம் செய்து தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். ஆரோஹள்ளி ஒன்றியம் சொன்டேனஹள்ளி கிராமத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயி நவீன் வீட்டிற்கு மந்திரி டி.கே.சிவக்குமார் சென்றார். அங்கு அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிவாரணம் வழங்கினார். அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

விவசாயிகள் இனி தற்கொலை செய்யும் முடிவை எடுக்கக்கூடாது. எந்த கடன் பிரச்சினையாக இருந்தாலும் மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து பேசி அதற்கு தீர்வு கண்டுகொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சி சார்பில் நவீன் குடும்பத்திற்கு நிவாரணமாக ரூ.50 ஆயிரமும், கர்நாடக பால் கூட்டமைப்பு சார்பில் ரூ.50 ஆயிரம் வழங்கியுள்ளோம். அரசு சார்பில் கூடுதல் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>தற்கொலை தீர்வு அல்ல</u>

பிரச்சினைகளுக்கு தற்கொலை ஒன்றே தீர்வு அல்ல. விவசாயிகள் தற்கொலை குறித்து மாநில அரசு விசாரணை நடத்தி காரணங்களை கண்டறிய உள்ளது. விவசாயிகளின் மேம்பாட்டிற்கு தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்படும். இவ்வாறு டி.கே.சிவக்குமார் கூறினார்.

அதைத்தொடர்ந்து தற்கொலை செய்து கொண்ட பன்னிகுப்பே கிராமத்தை சேர்ந்த லேகேஷ், எல்.ரவி உள்ளிட்டோரின் குடும்பங்களுக்கும் நேரில் சென்று அவர் ஆறுதல் கூறினார்.

**உஜனி அணையில் இருந்து பீமா ஆற்றில் 2 டி.எம்.சி. தண்ணீர் திறக்க மராட்டிய அரசு சம்மதம் மந்திரி எஸ்.ஆர்.பட்டீல் தகவல்**



பெங்களூரு, உஜனி அணையில் இருந்து பீமா ஆற்றில் 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட மராட்டிய அரசு சம்மதம் தெரிவித்து இருப்பதாக மந்திரி எஸ்.ஆர்.பட்டீல் தெரிவித்தார். மந்திரி பேட்டி

இதுகுறித்து மாநில தகவல் மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறை மந்திரி எஸ்.ஆர். பட்டீல் பாகல்கோட்டையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

பீமா ஆறு மராட்டியத்தில் இருந்து தொடங்கி கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை வழியாக பாய்ந்தோடுகிறது. இரு மாநில விவசாயிகளின் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு இந்த ஆறு முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. தற்போது பீமா ஆறு வறண்டுபோய் கிடக்கிறது. இதனால் இரு மாநில விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2 டி.எம்.சி. தண்ணீர் திறக்க சம்மதம்

இதைதொடர்ந்து விவசாயிகளின் நலன் கருதி, மராட்டியத்தில் உள்ள உஜனி அணையில் இருந்து பீமா ஆற்றில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என மராட்டிய மாநில நீர்ப்பாசனத் துறை மந்திரி மற்றும் மராட்டிய அரசிடம் கர்நாடக அரசு சார்பில் நேரில் சென்று கோரிக்கை வைக்கப்பட்டது.

தற்போது அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மராட்டிய மாநில அரசு, உஜனி அணையில் இருந்து பீமா ஆற்றில் 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட சம்மதம் தெரிவித்துள்ளது. இதனால் விரைவில் பீமா ஆற்றில் தண்ணீர் வர வாய்ப்புள்ளது. இதனால் கர்நாடக மாநில விவசாயிகள் மட்டுமல்லாமல் மராட்டிய மாநில விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## கர்நாடகத்தில் தொடரும் பரிதாபம் மேலும் 2 விவசாயிகள் தற்கொலை



பெங்களூரு,

கர்நாடகத்தில் கடன் தொல்லையால் விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து வருகின்றனர். இதுதொடர்பாக நேற்று வானொலியில் உரையாற்றிய முதல்–மந்திரி சித்தராமையா, விவசாயிகள் தற்கொலை செய்ய வேண்டாம் என்றும், கந்துவட்டிக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்த நிலையில், கடன் தொல்லையால் இன்றும் 2 விவசாயிகள் தற்கொலை செய்த பரிதாப சம்பவம் நடந்துள்ளது. ஹாவேரி மாவட்டம் கிரேகேரூர் தாலுகா ஹன்சபாவியை சேர்ந்தவர் ராமப்பா லமானி(வயது 57), விவசாயி. இவர், விவசாயத்திற்காக கூட்டுறவு வங்கியில் ரூ.2 லட்சமும், கந்துவட்டிக்காரர்களிடம் ரூ.1 லட்சமும் கடன் வாங்கி இருந்தார். விவசாயத்தில் போதிய லாபம் கிடைக்காததால் ராமப்பாவால் வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியவில்லை. இதனால் மனம் உடைந்த அவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இதேபோல, தார்வார் புறநகர் தாவரகெரேயில் வசித்து வந்த லிங்கப்பா(22) என்ற விவசாயியும் கடன் தொல்லையால் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவங்கள் பற்றி ஹன்சபாவி, தார்வார் புறநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

**சம்பா சாகுபடிக்கு முன்பு வீராணம் ஏரி பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும் தமிழக வாழ்வுரிமை கட்சி ஆய்வு கூட்டத்தில் தீர்மானம்**



பரங்கிப்பேட்டை

தமிழக வாழ்வுரிமை கட்சி ஆய்வு கூட்டத்தில் சம்பா சாகுபடிக்கு முன்பு வீராணம் ஏரி பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள் வாழ்வாதாரம்

தமிழக வாழ்வுரிமை கட்சியின் புவனகிரி ஒன்றிய, நகர நிர்வாகிகளின் ஆய்வு கூட்டம் புவனகிரியில் நடந்தது. கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் கரிகாலன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் முடிவண்ணன், நகர செயலாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைவர் முருகன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக மாநில தலைவர் வேல்முருகன் கலந்து கொண்டு பேசினார்.கூட்டத்தில் பெரியப்பட்டில் அமைக்கப்பட்டு வரும் தனியார் சாயப்பட்டறையால், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் சூழ்நிலை

உருவாகியுள்ளது. எனவே தனியார் சாயப்பட்டறைக்கு தடை விதிக்க வேண்டும். விவசாயிகளின் நலன் கருதி சம்பா சாகுபடிக்கு முன்பு, வீராணம் ஏரிப் பாசனத்திற்கு உள்பட்ட வாய்க்கால்களை விரைந்து தூர்வார பொதுபணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விருத்தாசலம் புவனகிரியில் புதிய வெள்ளாற்று மேம்பால பணிகளை தொடங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் நிர்வாகிகள் செந்தில்வேல், காசிநாதன், ரவிச்சந்திரன், குமார், பாண்டியன், ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் முத்து நன்றி கூறினார்.

இதே போல் விருத்தாசலம் அருகே காட்டுப்பரூரில் நடந்த கூட்டத்திற்கு கிளை தலைவர் கொளஞ்சி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம் முன்னிலை வகித்தார். முன்னதாக செயலாளர் பரமசிவம் வரவேற்றார். கூட்டத்தில் கர்ணத்தம்–காட்டுப்பரூர் கிராமத்திற்கு செல்லும் சாலையை சீரமைக்க வேண்டும். காட்டுப்பரூரில் வடிகால் வசதி, செய்து தரப்பட வேண்டும். என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் நீலகண்டன், ஆனந்தகுமார், ஜெயராமன் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய பொருளாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

## சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்



கடலூர், தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று தோட்டக்கலை துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

100 சதவீத மானியம்

கடலூர் மாவட்டத்தில் 2015–2016–ம் நிதி ஆண்டில் தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் மூலம் 100 சதவீதம் மற்றும் 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனம் அமைக்கப்பட உள்ளது. ஆகவே விவசாயிகள் தங்கள் பகுதி சம்பந்தப்பட்ட தோட்டக்கலை அலுவலர், தோட்டக்கலை உதவி அலுவலர்களிடம் விண்ணப்பம் அளித்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பத்துடன், சிறு மற்றும் குறு விவசாயி சான்றிதழ், சிட்டா மற்றும் அடங்கல் சான்றிதழ், நில வரைபடம், குத்தகை இடமாக இருந்தால் 10 வருட ஒப்பந்த பத்திரம், சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனத்துக்கான மதிப்பீடு, விவசாயி பங்கு தொகைக்கான வங்கி வரைவு ஆகிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப முகாம்

இதேபோல் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் மா, முந்திரி, கொய்யா, காய்கறி பயிர்கள் ஆகிய திட்ட இனங்கள் செயல்படுத்துதல், நீடித்த வேளாண்மை விரிவாக்க திட்டத்தின் கீழ் மானாவாரி சாகுபடியினை மேம்படுத்த குழுக்கள் அமைத்து, மரவள்ளி மற்றும் பசுந்தாள் பயிரிடும் விவசாயிகளுக்கு மானியமாக ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள விதை மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

இந்த 3 திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் வருகிற 22–ந்தேதி (புதன்கிழமை) காலை 10 மணி முதல் நடைபெற உள்ள விண்ணப்பம் பெறும் முகாமில் கலந்து கொண்டு, விண்ணப்பம் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை கடலூர் தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## பரமத்திவேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி




பரமத்திவேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்துள்ளதால்

விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் தேங்காய் பருப்பு

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவில் வேலூர், பரமத்தி, வசந்தபுரம், கபிலர்மலை, ஜேடர்பாளையம், சோழசிராமணி, கொத்தமங்கலம், பிலிக்கல்பாளையம், பாண்டமங்கலம், பாலப்பட்டி உள்ளிட்ட காவிரிகரையோரங்களில் விவசாயிகள் அதிக அளவில் தென்னை மரங்களை பயிர் செய்துள்ளனர். பரமத்திவேலூர் பொத்தனூர் வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தேங்காய் பருப்புகள் ஏலம் விடப்படுகிறது. இந்த விற்பனைக்கூடத்திற்கு விவசாயிகள் தங்களது நிலத்தில் விளைந்த தேங்காய் பருப்புகளை கொண்டு வருகின்றனர். இதில் கண்காணிப்பாளர் முன்னிலையில் தேங்காய் பருப்பு மறைமுக ஏலம் விடப்படுகிறது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

சென்ற வாரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெற்ற முறைமுக ஏலத்திற்கு 1,307 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு இருந்தது. இதில் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.59.05–க்கும், சராசரியாக ரூ.57.98–க்கும், குறைந்தபட்சமாக ரூ.56.90–க்கும் ஏலம் போனது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு 1,536 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு வந்திருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ரூ.61.05–க்கும், சராசரியாக ரூ.59.47–க்கும், குறைந்தபட்சமாக ரூ.57.90–க்கும் ஏலம் போனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் தேங்காய் பருப்பு விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

**பயிர்களுக்கு உயிர் உரங்களை இடுவதால் விளைச்சல் அதிகரிக்கும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் தகவல்**

கரூர், : விவசாயிகளுக்கு உழவு கருவிகள் குறைந்த வாடகைக்கு வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் கூறியதாவது:

செந்தில்குமார்: கரூர் உழவர்சந்தையில் விவசாயிகள் விற்பனை செய்யும் காய்கறிகள் இடைத்தரகர்கள் மூலம் வாங்கி வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தங்கவேல்: கூட்டுறவு வங்கிமூலம் விவசாயிகளுக்கு உழவு செய்ய அனைத்து விதமான உழவு கருவிகள் குறைந்த வாடகைக்கு வழங்க வேண்டும்.

ராசமாணிக்கம்: கா.பிச்சம்பட்டி கசிவுநீர் குட்டையின் வரத்துவாரி வாய்க்கால் பழுதடைந்துள்ளதை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும். குருநாதன்: அரவக்குறிச்சி ஒன்றியம் கொடையூர் ஊராட்சி போடம்பட்டி குளங்களை தூர்வாரி தடுப்புசுவர் கட்டி பாசன வசதி செய்யவேண்டும். செல்வராஜ்: தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய நகைக்கடன் பெறுவதற்கு பழைய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். முன்னோடிவங்கிஅதிகாரி: அனைத்து வங்கிகளிலும் விவசாயிகள் கடன்பெற வசதிகள் உள்ளன. ரூ.50ஆயிரத்திற்கு மேல் சிட்டா பட்டா நகல்கொடுத்தால் போதும். சுப்பிரமணியன்: ஒவ்வொரு சாகுபடிக்கும்

சிட்டா அடங்கல் கேட்கின்றனர். இதுபற்றிய சுற்றறிக்கையை அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பிட வேண்டும். முன்னோடி வங்கிஅதிகாரி: நிதிஆயோக் திட்டம் அமலுக்கு வருவதால் கடன் வழங்கும் நடைமுறை ஜூலைமாதம் 31ம்தேதி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன்: நெரூர் ராஜவாய்க்கால் நெரூரில் இருந்து மல்லம்பாளையம் வரை கரையைப்பலப்படுத்தி ரோடு வசதி அமைக்க வேண்டும். தண்ணீர் வீணாவதை சரிசெய்யவேண்டும்.வீரமலை சிவாயம் காட்டுவாரியில் மேட்டுமருதூர் பிள்ளையார்கோயில் அருகில் தடுப்பணை கட்டவேண்டும். இளங்கோவன்: மாயனூர் முதல் குமாரமங்கலம் வரை உள்ள வாய்க்காலை தூர்வாரவேண்டும். ராமலிங்கம்: டிஎன்பிஎல் கழிவுநீரை சரிவர சுத்திகரிக்காமல் விவசாயத்திற்கு விடுவது மற்றும் சுகாதாரமற்ற குடிநீர் விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 934 வாழைத்தார்கள் ஏலம்**

திருச்சி, : திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 934 வாழைத்தார்கள் ரூ.50,950க்கு ஏலம் விடப்பட்டது. திருச்சி மாவட்டம் திருச்செந்துறை வணிக வளாகத்தில் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. இதில் 934 வாழைத்தார்கள் ரூ.50,950க்கு ஏலம் விடப்பட்டது. இதில் வாைழத்தார்களுக்கு எந்தவித தரகுமின்றி விவசாயிகளுக்கு உடனடி பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. சென்னக்கரை, குழுமணி, அல்லூர், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், பொாியகருப்பூர், சின்ன கருப்பூர், அதவத்தூர், அந்தநல்லூர், குழுமணி, திருச்செந்துறை, சோமரசம்பேட்டை, முசிறி, போசம்பட்டி, முள்ளிகரும்பூர், கடியாக்குறிச்சி கிராமங்களிலிருந்து விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்றனர். ஏலத்தில் ரஸ்தாளி தார் ரூ.145, பூவன் ரூ.250, மொந்தன் ரூ.185, ஏலரிதார் ரூ.275, கற்பூரவள்ளி ரூ.150க்கும் ஏலம் போனது. இதில் 44 விவசாயிகள் கலந்து கொண்டனர். 934

வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டு ரூ.50,950 பட்டுவாடா செய்யப்பட்டது.

**வாழையில் கூன் வண்டு தாக்குதல் கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி, சில்வார்பட்டி, குள்ளப்புரம், ஜெயமங்கலம், மேல்மங்கலம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் வாழை சாகுபடி செய்யப்படுள்ளது. வாழை சாகுபடியில் தற்போது அதிகளவில் கூன் வண்டு தாக்குதல் உள்ளது. கூன் வண்டின் புழுக்கள் தண்டு அல்லது கொண்னை பகுதியில் வட்ட வடிவில் துளைத்து சென்று தண்டுப்பகுதியினை உண்ணும். அப்படி உண்ணுவதால் ஜெல்லி போன்ற திரவம் அந்த துளைவழியாக வெளிவரும். இப்படி உண்ணுவதால் வாழை மரத்திற்கு செல்லவேண்டிய சத்துக்கள் தடைபட்டுவிடுகிறது. இதனால் இலைகள் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறத்தில் காணப்படும். 7வது மாத்தில் இந்த கூன் வண்டு தாக்குதல் அதிகாமாக காணப்படும். இதனால் மகசூல் 10முதல் 90 சதவிகிதம் வரை பாதிக்கிறது.

ஒருங்கினைந்த முறையில் வண்டுகளை கட்டுப்படுத்தும் முறைகள். காய்ந்த இலைகளை வெட்டி எடுத்து தீயிட்டு அளித்தல், தண்டுப்பகுதியினை சுத்தமாக வைத்தல், தாய்மரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்வப்போது பக்க கன்றுகளை வெட்டி அகற்றவேண்டும். பெண்வண்டானது மரத்தில் முட்டையிடாமல் ஆரம்பத்திலேயே தடுக்க குளோரிபைரிபாஸ் 20 இசி என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி, மருந்து மற்றும் ஒட்டும் திரவம் 1 மில்லி கலந்து தண்டுப்பகுதியில் தடவவேண்டும்.வாழைத்தண்டு கவர்ச்சிபொறி மற்றும் வட்ட வடிவ தண்டுப்பொறியில் உள்ள இடைவெளியில் வண்டுகள் கவரப்பட்டிருக்கும்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மேல் தட்டை எடுத்து வண்டுகளை அழிக்க வேண்டும். வாழைத்தண்டு பொறியில் பிவேரியா பேசியானா மருந்தை தடவி வைக்க வேண்டும். வாழைக்கு ஊசி மூலம் மருந்து கொடுக்கும் முறை: தண்டில் கூன்வண்டின் பாதிப்பு அதிகமாக இருக்கும்போது, நடவு செய்த 5வது மாதத்தில் இருந்து 8வது மாதம் வரை, மாதத்திற்கு ஒரு முறை, மானோகுரோட்டாபாஸ் மருந்து 150 மில்லியை, 350 மில்லி தண்ணீரில் கலந்து, வாழையில் தரைப்பகுதியில் இருந்து 2 அடிக்கு மேலே ஊசியினை இரண்டு அங்குளம் கீழ் நோக்கி செலுத்த வேண்டும். மேலும் ஊசி மருந்து தண்டுப்பகுதியில் செலுத்தாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். வாழைப்பூ வெளிவந்தவுடன் ஊசி மூலம் மருந்து செலுத்துவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இவ்வாறு பெரியகுளம் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கின்றனர்.

**குருத்தழுகல், வாடல் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சை வாடல் நோய் தாக்கிய மரங்களில் தண்டுப்பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த சாறு வடியும், அடி மட்டைகள் பழுப்பு நிறமடைந்து காய்ந்து தொங்கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இவற்றை கட்டுப்படுத்த வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்றிற்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50கிலோ தொழு உரம் மற்றும் 5கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து இடவேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலமும் நோய் தாக்குதலை குறைக்க முடியும்.

டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50கிலோ மக்கிய தொழு எருவுடன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந்நோயை கட்டுப்படுத்தலாம். பாஸ்போபாக்டீரியா என்ற நுண்ணுயிர் 200கிராமுடன் (1 பாக்கெட்) 10கிலோ தொழு உரம் கலந்து இடுவதன் மூலம் நோயின் பாதிப்பை குறைக்கலாம். நோய் தாக்கிய ஒவ்வொரு மரத்திற்கும் 40லிட்டர் வீதம் 1 சத போர்டோ கலவையை (400கிராம் மயில் துத்தத்தை 20லிட்டர் நீரிலும், 400கிராம் நீர்த்த சுண்ணாம்பை 20லிட்டர் நீரிலும் கரைத்த கலவை) மரத்தை சுற்றி 1.8மீட்டர் வட்டப்பாத்தியில் மண் நன்றாக நனையுமாறு ஊற்றினால் நோய் பூஞ்சானத்தை அழிக்கலாம்.

இந்நோயை கட்டுப்படுத்திட ஆரியோ பஞ்சினால் 2 கிராம், தாமிரசல்பேட் 1கிராம் ஆகியவற்றை 100மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்த வேண்டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு மடிமனுள்ள புதிய இளஞ்சிவப்பு வேரினை கூரிய கத்தியால் சாய்வாக வெட்டி மேற்படி கரைசல் உள்ள பாலித்தீன் பையில் நுழைத்து கட்டி வைக்க வேண்டும். குருத்தழுகல் நோயானது தென்னங்கன்றுகளிலும், இளம் மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சை நிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதனை கட்டுப்படுத்த 1கிலோ மயில் துத்தம் மற்றும் 1கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசையை தயாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குருத்துப் பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்துக்கொண்டால் இந்நோய் எளிதில் கட்டுப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.